# ராணுவத்தினரின் அத்துமீறல்!

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 21 றஜப்: 8 இதழ்: 114
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-6-79

K. R. சிவலோகநாதன் அன் கோ.
6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
∴ அரிசி ஆலை
∴ கிறைண்டர்
∴ ஸ்கூட்டர்
உதிரிப் பாகங்கள்
விற்பனையாளர்கள்
K. R. SIVALOGANATHAN & Co.,
6, STANLEY ROAD,
JAFFNA. 2615

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY * RECEIVED 1979-6-14 PERIODICALS DIVISION

## ஜனாதிபதிக்கு எம். பி. புகார்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியைச் சேர்ந்த வளலாய் என்னுமிடத்திலுள்ள சுப்பிரமணியம் தம்பிராசா என்பவரது வீட்டிற்குள் இராணுவத்தினர் அத்துமீறிப் பிரவேசித்து, அங்கு தங்கியிருப்பதாகக் கோப்பாய் எம் பி திரு கதிரவேலுப்பிள்ளை ஜனாதிபதிக்குத் தந்தி மூலம் தெரிவித்துள்ளார்.

திரு கதிரவேலுப்பிள்ளை தந்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது: ''வீட்டிற்குள் அத்துமீறிப் புகுந்த இராணுவத்தினர், கடந்த மூன்று தினங்களாக அவ்வீட்டிலேயே தங்கியிருக்கின்றனர். இதன் எதிரொலியாக வீட்டின் உரிமையாளர்கள் பீதியடைந்து வீட்டை விட்டே ஓடிவிட்டார்கள் இதுமட்டுமின்றி அயலவர்களும் பீதிகொண்டுள்ளனர். வீட்டுச் சொந்தக்காரரின் மோட்டார் வாகனையும் இராணுவத்தினர் கைப்பற்றி, வீட்டிலுள்ள பொருட்களையும் சேதப்படுத்தியுள்ளனர் என்று எனக்கு முறையிடப்பட்டுள்ளது. உடனடியாக இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றி, வீட்டை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவ்வூர் மக்களைப் பீதியிலிருந்து பாதுகாக்குமாறும் கோப்பாய் எம் பி தமது தந்தியில் கோரிக்கை விடுத்துள்ளார். (கொ)

# அணிசேரா நாடுகளின் அதிமுக்கிய மகாநாடு!

## 25 நாடுகளிலிருந்து 415 பிரதிநிதிகள்

### கம்போடியா, எகிப்து பற்றி புதியதீர்மானம்?

### இந்திய அமைச்சர் வாஜ்பாயி நாளை வருகின்றார்

(நமது கொழும்பு நிருபர் மாலி)

இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் ஹவானாவில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் ஆறுவது உச்சி மாநாட்டின் முன்னோடியாக, ஈழத்தில் நடைபெறும் அதிமுக்கிய மாநாடு இன்று இங்கு ஆரம்பமாகிறது. காலையில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியக உயர் அதிகாரிகள் (மட்டத்திலான) மாநாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி திரு. பி. ஜே. பெர்னாண்டோ தலைமைவகிப்பார். இம் மாநாட்டில் 25 நாடுகளைச் சேர்ந்த 415 பிரதிநிதிகள் கலந்துகொள்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அணிசேரா நாடுகளின் அதிமுக்கிய மாநாடான இணைப்பு பணியக சிரேஷ்ட அதிகாரிகள் மாநாடு, இன்று காலை பத்து மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிறது. இரகசியமாக நடைபெறும் இம்மாநாட்டுக்கு ஐநாவிலுள்ள இலங்கைப் பிரதிநிதி திரு பி ஜே பெர்னாண்டோ தலைமைவகிப்பார். இம்மாநாட்டில் 25 நாடுகளைச் சேர்ந்த 415 பிரதிநிதிகள் கலந்துகொள்வதுடன், 35 வெளிநாட்டமைச்சர்களும் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது,

கம்போடியாவின் புதிய அரசை அங்கீகரிக்கும் கோரிக்கையும், இந்த அணியிலிருந்து எகிப்தை நீக்கும் பிரச்னையும் அதிமுக்கிய விஷயங்களாக இம்மாநாட்டில் இடம்பெறும் அதே நேரத்தில் எகிப்தை நீக்கும் அரபு நாடுகளின் கோரிக்கைக்குக் கடுமையான எதிர்ப்பு இங்கு உருவாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்

(6-ம் பக்கம் பார்க்க)

### ஐம்பது ரூபா அலவன்ஸ்:

## அமைச்சரின் சுற்றறிக்கை

### உதவி அரசாங்க அதிபர் கருத்து

[புலோலி]

''லாபத்தில் இயங்கும் ப நோ கூட்டுறவுச்சங்கங்கள் தான் ஊழியர்களுக்கு 50 ரூபா அலவன்ஸ் வழங்க வேண்டுமென்றும் நஷ்டத்தில் இயங்கும் சங்கங்கள் வழங்கக்கூடாதென்றும் அமைச்சரின் சுற்றறிக்கை கூறுகிறது. இந்தநிலையில் கடந்த 5 மாதங்களுக்கும் அலவன்ஸ் வழங்கமுடியாத நிலையிலிருக்கிறேன்''

பருத்தித்துறை உதவிஅரசாங்க அதிபரும் பருத்தித்துறை ப நோ. கூ. சங்கத் தலைவருமான திரு: வேலும்மயிலும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

நஷ்டத்தில் இயங்கும் சங்கங்கள் 50 ரூபா அலவன்ஸ் வழங்கினால், அதனை நெறியாளர் குழுவே பொறுப்பு ஏற்கவேண்டிவரும். இச் சங்கமும் ஜனவரி மாதம் 60 ஆயிரம் ரூபா லாபம்பெற்றது பெப்ரவரி மாதம் 13,700 ரூபா நஷ்டமடைந்துள்ளது ஆதலால் ஜனவரி மாதத்துக்குரிய அலவன்ஸ் மட்டும் கொடுக்க தயாராக இருக்கிறேன். மற்ற மாதங்களுக்குப் பார்த்தபின்தான் முடிவுசெய்யலாம். இதனை ஊழியர் ஏற்றுக்கொள்ளவில்லை, ஊழியர்களின் வேலைநிறுத்தம் நியாயமற்றதாகும்'' [க]

சண்டிலிப்பாயிலும், மாதகலிலும்

# இரு மாணவிகள் கடத்தப்பட்டனர்!

[பண்டத்தரிப்பு]

கடையில் அப்பியாசக் கொப்பி வாங்கி வருவதாக வீட்டில் கூறிவிட்டுச் சென்ற 14 வயதுப் பாடசாலை மாணவி ஒருவர் வாலிபர் ஒருவரால் கார் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டாராம். சண்டிலிப்பாயில் நடைபெற்ற இத் துணிகரச்சம்பவம் தொடர்பாகப் பிரஸ்தாப பெண்ணின் தாயார் சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் புகார்செய்துள்ளார். பிரஸ்தாப மாணவியை அதே இடத்தைச்சேர்ந்த 'வயறிங்' வேலைசெய்யும் திருச்செல்வம் என்றவாலிபர் கார் ஒன்றில் கடத்திச்சென்றதாகச் செய்யப்பட்ட இப் புகாரையடுத்து சங்கானைப் பொலிசார் பிரஸ்தாப வாலிபரையும், இளம் பெண்ணையும் தேடிவருகின்றனர். இந்தக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்தவர் என்று சந்தேகிக்கப்படும்

(6ம் பக்கம் பார்க்க)

ஈரானில்

### மீண்டும் 9 பேர் சுட்டுக்கொலை

தெஹ்ரான், ஜூன் 3

ஈரானில் நேற்று மூன்று ஜெனரல்கள் உட்பட ஒன்பது இராணுவ அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் இதுவரை 250 பேர் மரணதண்டனை பெற்றுள்ளனர்.

# எனது அமைச்சின் உத்தியோகத்தரை ஏன் இங்கு அழைத்து வந்தேன்?

[சங்கானை]

யாழ் மாவட்டத்தில் உணவுப்பொருளகளை ஐந்துமாதத்திற்குசேமித்துவைக்கக் கூடிய நான்கு களஞ்சியங்களை நிறுவுவதற்கு எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது இதனுடன் யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருளகளைக் கொண்டுவரும் கப்பல்களையும் காங்கேசன் துறைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொளவேன்''

### அமைச்சர் ஹேரத் தரும் விளக்கம்

இவ்வாறு உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு எஸ் பீ ஹேரத், சங்கானை ப நோ கூ சங்கத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினார் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு சே சி வேலாயுதன் தலைமைவகித்தார் அமைச்சர் மேலும் கூறியதாவது;-

''நான் எனது அமைச்சிலுள்ள சகல உத்தியோகத்தர்களையும் இங்கு அழைத்து வந்துள்ளேன் இதற்குக் காரணம் இருக்கிறது. இவர்கள உண்மைநிலையை அறியவேண்டும் அல்லாவிட்டால் அவர்களால் பொதுமக்களின் குறைபாடுகளை அறியமுடியாது

''நான் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தபொழுது பல அனுபவங்களைப் பெற்றுள்ளேன். அவற்றின் மூலம் பல குறைபாடுகளை இருந்ததை நன் அறிவேன் அவற்றை நிவிர்த்திசெய்யவே நான் உழைத்து வருகின்றேன். இச்சங்கத்திற்கு நான் விஜயம் செய்து உங்கள நெசவாலையையும் அச்சிடு பகுதியையும் பார்வையிட்டேன், இவைகளனைத்தும் கூட்டுறவின் முன்னேற்றத்தையே காட்டுகின்றது திரு வேலாயுதன்

[6-ம் பக்கம் பார்க்க]

## கேள்விப்பத்திரம்

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூட்டுறவுச்சங்கம் புதிதாகக் கொள்வனவுசெய்துள்ள இசுசு லொறிக்கு உடற்கோப்பு (பொடி) அடிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இது பற்றிய சகல விபரங்களும் 6-6-79 புதன்கிழமை முதல் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் "பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம், அளவெட்டி" என்ற முகவரிக்கு 14-6-79 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொது முகாமையாளர்
அ. ம. ப. கூ. சங்கம்

2653

---

இராமசுவாமி சதானந்தன்
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
புலோலி தெற்கு-புலோலி

## அறிவித்தல்

மாவட்டநீதிமன்றம்
பருத்தித்துறை

இல: TR. 107

நீலக்குட்டி கதிர்காமதம்பி
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
முகாமையாளர் அலைப்பெற்றுளை, சுப்பிரமணிய சுவாமிகோவில்.
(மனுதார்)

மனுதார், அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அலைப்பெற்றுளை சுப்பிரமணிய சுவாமி கோவில் ஆதனத்தை அதில் குடியிருப்போருக்கு விற்று கோயில் திருப்பணி வேலைகளையும் கோயில்நலனுக்கும் பாவிப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். இவ் அனுமதியை வழங்குவதற்கு தடை இருப்பின் 1979ம் ஆண்டு ஆனி மீ 29ம் திகதிக்கு முன் அத்தகைய ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தவறின் அனுமதி வழங்கப்படும்.

### அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண பகுதியில் வடமராட்சிப்பகுதி புலோலி கிழக்கு இங்கபாகு தேவன் குறிச்சியிலுள்ள 'கல்விளந்திடல்' நில. பர 67½ இதில் நில. பர. 17குளி 12½ம் கட்டையெளிக் கோயிற்பற்று துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சியிலுள்ள புளியடிக்கலட்டி நில. பர. 12 7/8 உத்தமன் கலட்டி நில. பர. 15 இராக்கன் புளியடி நில. பர. 39 3/8 (இது பிரிவிடல் வழக்கில் இணைக்கப்பட்ட 3292ம் இலக்க படத்தின்படி நில. பர. 39 குளி 1 14/32) இராக்கன் புளியடி நில. பர. 40 7/8 சேர்ந்த காணிக்கு ஏறக்குறைய நில. பர. 126 இதில் கழித்தநிலம் நீக்கி மிகுதி நில. பர. 69குளி 19/32 இதில் வடக்குப்புறமாக நில. பர. (18) பதினெட்டு எல்லை கிழக்கு சிவகுரு கைம்பெண் பொன்னம்மா வுக்குரியாதனம் வடக்கும் மேற்கும் சேனாதிராசசேகரம் ஏகாம்பரநாதனுக்கும் மருபேருக்குமுரியாதனம் தெற்கு இவ்வாதனத்தின் மிகுதிப்பாகம் இவ் வெல்லைக்குட்பட்டவை முழுவதும் இது 1978ம் ஆண்டுபுரட்டாதி மீ 16ம் திகதி நில அளவையாளர் க. கிருஷ்ணபிள்ளையால் 112ம் இலக்க படத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது

மன்றின் கட்டளைப்படி

ஒப்பம்
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை
1979ம் ஆண்டு வைகாசி மீ 15ம் திகதி.

2518

---

# "ஐ. தே. கட்சி வடக்கேவர கூட்டணியே காரணம்"

## -- குமார் பொன்னம்பலம்

[யாழ்ப்பாணம்]

"வடபகுதிக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் வருவதற்கு வழிவகுத்துக் கொடுத்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே" என்று சாவகச்சேரியில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டத்தில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கூறினார்.

சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ் கிளைத்தலைவர் திரு ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"கூட்டணியினர் தமிழ் ஈழ லட்சியத்திற்காக நின்று போட்டியிட்டவர்கள். ஆனால் லட்சியத்தை மறந்து அரசிடம் சலுகைகளைபெற்றுக்கொடுத்து ஆதரவை திரட்டினர்.

"கூட்டணியினர் தம்மிடமிருந்து ஆதரவாளர்களுக்கு சலுகைகளைபெற்றுக்கொடுத்து ஆதரவை திரட்டுகின்றனர் என்பதை யு என் பி. அரசுக்கு தெரிந்துவிட்டது. இதனால் தமிழ் மக்களுக்குத் தாங்களே நேரடியாக உதவிசெய்து ஆதரவைப்பெற யு என் பி விரும்பியது. அதனால்தான் வடபகுதியில் யு என் பி போட்டியிடமுன்வந்தது.

'ஆரம்பத்தில் தமிழ்மக்கள் லட்சியத்துடன் நிற்பார்கள், சலுகைகளை ஏற்கமாட்டார்கள் என நம்பியிருந்த யு என் பி வடபகுதிக்குத் தலைகாட்டவில்லை ஆனால் கூட்டணியினர் மூலம் லட்சியத்தை மறந்து சலுகைகளைப் பெறுகிறார்கள் என்பதை யு என் பி அறிந்துகொண்டதால் வடக்கில் போட்டியிட்டது.

சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ் கிளைத் தலைவராக திரு சு. கனகரத்தினமும், உபதலைவராக திரு. எஸ். எஸ். பால

(6-ம் பக்கம் பார்க்க)

---

## கேள்விப்பத்திரம்

எமது சங்கத்தில் பாவிக்கப்பட்டதும் பழுதடைந்ததுமான கீழ்க்காணும் பொருட்களுக்கு கேள்விப்பத்திரங்கள்கோரப்படுகின்றது.

1. பழைய பற்றி (லொறி) 01 தனி.
2. றேடியேற்றர் கோர் (லொறி) 01 தனி (இஸ்சூஸ்சு).
3. கியர்செற் பாட்ஸ் (லொறி) 01செற் (இஸ்சூஸ்சு).
4. றிமின் ரயர் (825X20) 3 தனி (லொறி)
5. தேய்ந்த ரயர் (825X20) 07 தனி (லொறி).
6. இன்பின் செற் (மூன்) 01 செற் (லொறி) இஸ்சூஸ்சு.
7. இஸ்சூஸ்சு லொறிபெரிய முன் கண்ணாடி (புதியது) 01.
8. கழிவு மா அந். 51-2-19
9 சர்க்கரை அந்தர் 1-1-1½.
10. கழிவு சீனி அந்தர் 1-2-05.
11. பெற்றோல்மக்ஸ் 04 தனி.
12. சங்கிலி தராசு பழையது 02 தனி

(மேற்படி பொருட்களை வேலைநேரங்களில் பார்வையிடலாம்.) கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஆனிமாதம் 15ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக அனுப்பப்படல்வேண்டும்.

சி. கணபதிப்பிள்ளை
பதில்பொதுமுகாமையாளர்
ஊர். ப. நோ. கூ. சங்கம்.
ஊர்காவற்றுறை.
ஊர்காவற்றுறை.
2-6-79 2655

---

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஏழாலை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலம் சென்ற சிவசிதம்பரம் கைம்பெண் இராசினம் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்,

மரணமெய்தியவர்
ஏழாலை, ஏழாலை மேற்கைச்சேர்ந்த சிவசிதம்பரம் கிருஷ்ணனந்தன்-
மனுதார்,

மரண சாதன)
) தி. 22.
நியாயாதிக்கம்)

மேலே காட்டப்பட்ட இலக்கம் கொண்ட வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்து நிர்வாகப்பத்திரம் பெறுவதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள தெனவும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும், இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1978ம் ஆண்டு ஐப்பசி 12ந் திகதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி.

ஒப்பம்
ரிச்செட் ஜெயராஜசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:-
அ. உமாசங்கர்,
மனுதாரின் சட்டத்தரணி.

2644

---

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 21-ம் திகதி
[திங்கட்கிழமை]
(4-6-1979)

மேஷம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம், பொருட்செலவு உண்டு.

இடபம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம், பொதுப் பணிகளில் ஈடுபடுவதன்மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர்.

மிதுனம்: வியாபாரத் துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்தவிடயத்தில் நஷ்டமேற்படலாம், நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

கடகம்: வணிகத் துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், மக்களின் பிரயல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

சிம்மம்: வாய்வுக்கோளாறு உடல்நலத்தைப் பாதிக்கலாம், உணவு விஷயத்தில் சுகாதாரம் வேண்டும், தானியநஷ்டத்திற்கிடமுண்டு, வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி: அவசர முடிவின் மூலம் ஆபத்தைவிலைகொடுத்து வாங்குவீர்கள். மன நிம்மதி குன்றும், அயலவர்களின் குறுக்கு வழித்தலையீடு உங்கள் கோபத்தைத் கிளறும், அடக்கம் விரும்பத்தக்கது.

துலாம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## ஊரெழு கிளானை அம்பாளுக்கு கும்பாபிஷேகம்

ஊரெழு கிழக்கு கிளானை மனோன்மணி அம்பாள் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. கிரியைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 நாட்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதுடன் கும்பாபிஷேக தினங்களில் சமயச் சொற்பொழிவுகளும் இசைவிருந்தும் இடம் பெறும்.

இவ்வாலய உற்சவம் ஆடிப் பூரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு முதல் 10 நாட்களுக்கு முன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். [அ]

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட A55 கேம்பிரிட்ஜ் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்; S கோகதாஸ், 30/2 நீக்கிலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 2641

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவான்ஸ் இறைவடிவமில், 67 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2643

---

# "தமிழ் மன்னர் ஆட்சியில் ஆலயங்கள் சிறந்து விளங்கின"

(புங்குடுதீவு)

"தமிழ் மன்னர்களின் ஆட்சி நிலவிய நேரத்தில் சைவ ஆலயங்கள் அரசர்களின் அரவணைப்பில் திகழ்ந்து சிறப்புற்று விளங்கின. இன்று மக்களாட்சி நடைபெறுவதால் ஆலயங்களைப் பேணிப் பாதுகாத்து திருப்பணிகளை தேவையான முறையில் செய்ய வேண்டியது பொதுமக்கள் கடமையாகும்."

இவ்வாறு புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் ஆலய பாலஸ்தான நிறைவேற்ற வைபவத்தில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கும்பிடுகின்றவர்களுக்கே கோயில் சொந்தம் என்ற கோட்பாடு நிலவுகின்ற இன்றைய காலகட்டத்தில் ஆலயங்களில் தனி மனிதர் ஆதிக்கம் நிலவுவதை எவரும் விரும்பமாட்டார்கள் என்பதை உணர்ந்து ஆலய நிர்வாகிகள் பொதுமக்களை மதித்துப் பணிபாடு காத்து ஆலயத்தை நிர்வகிக்கவேண்டும். ஆலயங்களைப் பாதுகாத்தலின் ஒரங்கமே சிவாச்சாரியர்களை ஆதரவளித்து நடாத்துதலாகும். எனவே சிவாச்சாரியார்களின் மனங்குளிரப் பண்போடு நடக்கவேண்டியது ஆலயத்தை அண்டியிருப்போரின் அரிய கடமைகளில் ஒன்றாகும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கொப்ப ஆலயப் பணிகளோட்டி தமிழ்க்கலையும் கலாச்சாரமும் வளர்க்கப்பட வேண்டும்."

பிரதிஷ்டா கிரியா கலாப மணி சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்களும் பேசினார். (கு)

---

குரும்பசிட்டியில்

## சிறுவர்தின விழா

[தெல்லிப்பழை]

சர்வதேச சிறுவர்தின விழாவும் கைப்பணிக் காட்சியும் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்தில் அண்மையில் கொண்டாடப்பட்டது.

ஆசிரியர் சி. சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மருத்துவமாது செல்வி லலிதா வேலுப்பிள்ளை 'சிறுவர் பேணவேண்டிய சுகாதார விதிகள்' பற்றி உரையாற்றினார்.

சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன், சித்திர- கைப்பணிக் காட்சிகளும் இடம்பெற்றன. 'காங்கேயன் சபதம்' நாடகமும் நடைபெற்றது. [ச]

---

யா/வட்டு. இந்துக்கல்லூரி
சித்தங்கேணி.
மேற்படி கல்லூரியின்
பாடசாலை அபிவிருத்திச் சபையின்
அங்குரார்ப்பணக் கூட்டம்
(6-6-79) புதன்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில்
கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
பெற்றோர், பழைய மாணவர், நலன்கருதுவோர்
அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.
2628 அதிபர்.

உ
அருணோதயக் கல்லூரி
அளவெட்டி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
ஆரம்ப அமைப்புப்
பொதுக்கூட்டம்
5-6-79 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 3 மணி
பெற்றோர், பழைய மாணவர்,
பாடசாலை நலன்விரும்பிகள் யாவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
அதிபர்.
4-6-79. 2657

# 77, 78, 79 ம் ஆண்டுகளில்

# ப.நோ.கூ. சங்கங்களில் நடந்தவை பற்றியும் விசாரணை நடக்கும்

## "சங்கத்தின் வீண்செலவினங்களுக்கு நெறியாளர் குழுவே முழுப்பொறுப்பு"

### கச்சேரி மாநாட்டில் ஹேரத்

(யாழ்ப்பாணம்)

கடந்த அரசு காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் நடந்த ஊழல்பற்றி நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்துடன் நாம் நின்றுவிடவில்லை. 78, 79ம் ஆண்டுகளில் சங்கங்களில் நடந்தவை பற்றியும் விசாரணை நடக்கும் கூட்டுறவு புதிய சட்டத்தின்படி சங்கத்தில் நடக்கும், வீண்செலவினங்களுக்கு நெறியாளர்களே பொறுப்பாகும். ஆணையாளர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரமுண்டு.

யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் நடந்த மாநாட்டில், உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எச். பி. ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

**கா. யோகநாதன்**

யாழ். மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் தலைமையில் நடந்த மாநாட்டில், அமைச்சர் ஹேரத் மேலும் கூறியதாவது: விரைவில் கூட்டுறவு இயக்கத்தை மக்களிடம் ஒப்படைக்கப்போகிறோம். தற்போது கிளைக்குழுத்தேர்தல்கள் நடைபெற்றுவருகிறது. ஜூலை மாத இறுதியில், சங்கங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்படும்.

### அரிசி ஏற்றுமதி

கடந்த வருடம் அரிசியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தோம். இவ்வருடம் சூறாவளி காரணமாக ஏற்றுமதி செய்யவில்லை, அடுத்தவருடம் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதிசெய்வோம்.

### சீனிப் பாவனை அதிகரிப்பு

இந்நாட்டில் சீனியின் பாவனை அதிகரித்துள்ளது இனிப்புப் பண்டங்களின் உற்பத்தி அதிகரிப்பே இதற்கு முக்கிய காரணமாகும்

கே துரைரத்தினம்: கசிப்பு உற்பத்தி அதிகரிப்பும் ஒரு காரணமாகும்.

அமைச்சர்: சாதாரணமாக மாதம் 10,000 தொன் சீனி நாடுமுழுவதும், தேவைப்பட்டு வந்தது. இத்தொகை கடந்த ஜனவரி முதல் 19,000 தொன்னாக அதிகரித்துவிட்டது.

கசிப்பு போன்றவற்றிற்கும், சீனி அதிகமாக செலவிடப்படுகிறது; இதனை நாம் தடுக்க வேண்டும்.

வடபகுதி விளைபொருள் உற்பத்திச் சங்கத்தை முன்போல், மக்கள் பிரதிநிதிகள் மூலம், இயங்க நடவடிக்கை எடுப்பேன். இதனை உடனடியாக நிறைவேற்றுவது கஷ்டம்.

வி. தர்மலிங்கம்: முதலில், பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களை மக்கள் கையில் ஒப்படைக்கவேண்டும். அச்சங்க பிரதிநிதிகள்தான் விளைபொருள் சங்கத்தை நடத்துவார்கள்.

அமைச்சர்: கூட்டுறவுச் சங்கங்கள் விரைவில் மக்கள் கையில் ஒப்படைக்கப்படும். தற்பொழுது கிளைகளுக்கான தேர்தல் நடைபெற்றுவருகின்றது

அமைச்சர்: பனஞ்சீனி உற்பத்தியை அதிகரிப்பதுடன் அதனை அபிவிருத்திசெய்ய வேண்டும்.

### கள்ளிலிருந்து பெறலாம்

கே. துரைரத்தினம்: மோட்டார் வாகனங்களுக்கு எரிபொருளை கள்ளிலிருந்து பெற முடியும் எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அமைச்சர்: அப்படியா மிக நல்லது

கே துரைரத்தினம்: இது பகிடியல்ல அமைச்சர் எனக்கு அனுமதி தருவாரேயானால் சகல மோட்டார் வாகனங்களுக்கும், எரிபொருளையும் கள்ளிலிருந்து பெற்றுத்தர முடியும்.

அமைச்சர்: மோட்டார் வாகனங்கள் பற்றி எனக்கு தெரியுமாகையால், கள்ளிலிருந்து ஏற்படக்கூடிய வேகத்தை உணரக்கூடியதாக இருக்கிறது.

கே. துரைத்தினம்: பெற்ரோலை அரசு 40 ரூபா வாகக் கூட்டினால், சகல வாகனங்களுக்கும், எரிபொருளை கள்ளிலிருந்து குறைந்த செலவில தரமுடியும்

அமைச்சர்: நான் நாட்டின்சகல பகுதிகளுக்கும் நேரில் சென்று மக்கள் குறைகளைக் கேட்டறிந்து செயலாற்றத் திட்டமிட்டுள்ளேன். அதன்படி தான் எனது அமைச்சு உத்தியோகத்தர்களுடன் இங்கு வந்துள்ளேன்.

### மாவட்ட அமைச்சர் உரை

மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் கூறியதாவது: யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை கூட்டுறவுத்துறை முதன்மைவகிக்கிறது, இங்குள்ள மக்களுடன் நேரில் கலந்தாலோசித்து, மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து பிரச்

(5ம் பக்கம் பார்க்க)

## "வடக்கிற்கு ஒதுக்கிய பணத்தைப் பயன்படுத்த என்றுமே தவறியதில்லை"

### — அமிர்

(யாழ்ப்பாணம்)

"வடபகுதிக்குஒதுக்கப்பட்ட 1 கோடி ரூபாவை நாம் பயன்படுத்தவில்லையென அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், வடக்கிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை ஒருபோதும் நாம் பயன்படுத்தாமல் விடுவதில்லை. 1000 ரூபா இருந்தால் கூட அதனையும் எதற்காகவாவது பயன் படுத்தாமல் விடுவதில்லை'

எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், செயலக மாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஏ அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணம் கூட்டுறவுத்துறையில் முன்னேறியிருக்கிறது ஆசியப் பகுதி நாடுகளில் பெருமைப் படக்கூடியவிதத்தில் கூட்டுறவு இயக்கம் இங்கு கட்டி எழுப்பப்பட்டுவருகிறது.

கடந்த அரசுகாலத்தில் கூட்டுறவு இயக்கம் அரசு இயக்கமாகமாற்றப்பட்டு ஜனநாயக கூட்டுறவு தன்மை அழிக்கப்

(5ம் பக்கம் பார்க்க)

**மக்கள் கருத்து**

## ஓரினக் கொள்கை மிகப்பாதகமானது

தேசிய இனப்பிரச்சனையில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலையைத் தெளிவாக்கும் வகையில் லயனல் போபகே 01-05-78-ந் திகதிய "லங்கா கார்டியன்" இதழில் எழுதியுள்ள கட்டுரை சுயநிர்ணய உரிமையைப் பொறுத்தவரையில் சரியான மார்க்ஸிஸ நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைக்கிறது.

தமிழ்பேசும் மக்களின் பூரண சுயநிர்ணய உரிமையை மக்கள் விடுதலை முன்னணி அங்கீகரிக்கிறதெனக் கூறும் திரு போபகே, அந்த உரிமையைப் பிரிந்து செல்வதற்காகப் பிரயோகிப்பதெனத் தமிழ்பேசும் மக்கள் தீர்மானிக்கும் பட்சத்தில் அத்தீர்மானம் பற்றிய மாறுபட்ட கருத்தைச் சித்தாந்த மட்டத்தில் வெளிப்படுத்தும் உரிமை மக்கள் விடுதலை முன்னணிக்கு உண்டெனவும், அதே நேரத்தில் அத்தீர்மானத்திற்கு எதிராக ஆயுதபலத்தைப் பிரயோகிக்கும்வரையும் அதை எதிர்த்துப் போராடுமெனவும் கூறுகிறார். இது சுயநிர்ணய உரிமை தொடர்பான தவறற்ற மார்க்ஸிஸ அணுகுமுறையாகும்.

இலங்கையின் எல்லைக்கோடுகள் பாதிக்கப்படாத வகையிலும் தேசத்தின் ஐக்கியத் தன்மையைத் தொடர்ந்து பேணும் வகையிலும் சுயநிர்ணய உரிமை பிரயோகிக்கப்படல் வேண்டுமெனக் கூறுவதன் மூலம் அவ்வுயர்ந்த கோட்பாட்டை அர்த்தமற்றதாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளையில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு வரவேற்கப்படவேண்டியது.

ஆனால் நாட்டின் (நேஷன்) அந்தஸ்து தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி கொண்டுள்ள நிலைப்பாடு தமிழ்பேசும் மக்களுக்கு மிகப் பாதகமானதும் சுயநிர்ணய உரிமை தொடர்பாக முன்னணி வெளியிட்ட கருத்துகளை அழித்தொழிப்பதுமாக அமைந்திருக்கின்றது.

"சிங்களம் பேசும் மக்களும் தமிழ் பேசும் மக்களும் தேசிய இனமென்ற நிலையிலிருந்து இலங்கைநாட்டினம் என்ற ஒரு நாட்டினமாக வளர்ச்சியடையும் கட்டத்திலுள்ள மக்கள்" என்று திரு லயனல் போபகே கூறுகின்றார். மொழிவாரியான இவ்விரு பிரிவினரும் ஒரே நாட்டினமாக வளர்ந்து வருபவர்கள் என்பதே இதன் அர்த்தம்.

மார்க்ஸிஸ சித்தாந்தப்படி வரலாற்று ரீதியான வாழ்வைக் கொண்டுள்ளவர்களும், பொதுவான மொழி, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்வு ஆகியவற்றிற்கு உரித்தானவர்களும், பொதுக் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றால் வெளிப்பாடு பெறும் ஐக்கிய மனநிலை உடையவர்களுமான ஒரு கூட்டம் மக்களே நாட்டினமாகும் ஒரு நாட்டினத்திற்குரிய தகைமைகளுள் பொதுவான மொழியும் முக்கியமானவொன்றென்பதும், இருமொழி பேசும் ஒரு நாட்டினம் சாத்தியமற்றதென்பதும் இதிலிருந்து புரிகின்றது.

சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் எதிர்காலத்தில் ஒரே நாட்டினமாக அமைபவர்கள் என்ற கருத்து மார்க்ஸியத்திற்கு முரணானது மாத்திரமல்லாமல் சிறியஇனத்தின் மொழி, தனித்துவம் ஆகியவற்றினது அழிவின் மூலம் இனசங்கமத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. இது தமிழ் பேசும் மக்களுக்கு மிகப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

**சிவா சுப்பிரமணியம்,**
அமைப்புச்செயலாளர்.
செந்தமிழர் இயக்கம்.
கொழும்பு-6.



# "இறைவனைமுன்வைத்துச்செய்தால் எந்தக் காரியமும் எளிதாக முடியும்"

## சிங்காரவேலனுர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

"இறைவனுடைய திருவருளை முன்வைத்து செயலாற்ற முற்பட்டால் எந்தக் காரியமும் எமக்கு எளிதாக முடிந்துவிடும் இறைவனின் பெருங்கருணைப் பேறின்றி எம்மால் எக்காரியத்தையும் சாதிக்கமுடியாது".

இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றுவரும் சேக்கிழார் விழாவின் இரண்டாம் நிகழ்ச்சியில் சிறப்புச் சொற்பெருக்காற்றிய செஞ்சொற் கொண்டல் பேராசிரியர் சோ. சிங்காரவேலன் கூறினார்.

திரு சோமசுந்தரம் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் பேராசிரியர் சிங்காரவேலன் தொடர்ந்து பேசியதாவது:

"ஒருவன் இறைவன் திருவருளை முன் வைத்து எக்காரியத்தைச் செய்தாலும் அதை எளிதில் முடித்து விடலாம்

"பெரியபுராணம் காட்டும் அரசியல், அறம், பொருள், இன்பம் வழுவாமல் அறநெறி பேணும் அரசியல் என்பதை மனுநீதியின் வரலாறு காட்டும் கடவுள் பற்றி நம்பிக்கை இல்லாத தமிழக முன்னாள் தி மு க அரசு கூட மாவட்டத் தலைவரிடம் பொதுமக்கள் குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லித் தீர்க்க வேண்டும் என்ற திட்டத்திற்கு மனுநீதித்திட்டம் என பெயர்வைத்தார்கள என்பது இச் சந்தர்ப்பத்தில குறிப்பிடத்தக்கது

மனுநீதிச் சோழன் காலத்திலேயே பசுவதைச்சட்டம் இருந்திருக்கிறது ஆகவே இன்றுவினோபாபாவேபசுவதைத் தடைச் சட்டத்திற்காகப் போராடுவது தவறில்லை நாவலர் பெருமான் கூட இதுபற்றி கண்டித்து எழுதியிருந்தார் கொல்லாமை கள்ளுண்ணாமை என்பன திருவள்ளுவர் காலத்திலேயே இருந்திருக்கிறது இன்று ஆட்சியிலிருப்போர் தம் மீது சுமத்தப்படுகின்ற குற்றங்களிலும் தண்டனைகளிலும் இருந்து தப்ப முயற்சிக்கின்றனர் ஆனால் வலிந்து தனக்குதானே தண்டனையைத் தந்து நீதிநெறியிற் சிறந்தவன் மனுநீதிச் சோழன்

முன்னவன் முன் நின்றால் முடியாதது ஒன்றுண்டோ தொல்காப்பியர் முன்னவன் என்பதை முனைவன் என்றார் முனை என்ற அடிப்பிறந்த சொல்லே முனைவன் இது மரபு இன்று புதுக் கவிதை என்று எழுதினார்கள மரபுக் கவிதையை, பெருங்காப்பியங்களை வெண்பாக்களை இலக்கியமரபிற் கமைந்த அருமையான கவிதைகளை கற்ற நாம் இலக்கண மரபற்ற இப்புதுக் கவிதைகளை மறக்கலாமா? அதற்காக புதுக் கவிதைகளைப் புறக்கணிக்கவில்லை அந்தக் கவிதைகள மூலம் பயன் இருந்தால் அதை நாம் வரவேற்போம்

"தேவார இசை மனதை நிறைவு எய்தச் செய்கின்றது இங்கு இந்த மண்டபத்தில் இந்துக் கல்லூரி மாணவர்களும், இராமநாதன் கல்லூரிமாணவிகளும் அருமையாகத் திருமுறைகளை ஓதினார்கள திருமுறைகளை ஓதுவதெப்படி? ஞானாசிரியர்கள் எப்படி ஓதினார்கள என்பதை சொல்லித்தருவதுதான் பெரிய புராணம் எனவேதான் சேக்கிழார் சுவாமிகள எப்படி வாழ வேண்டும் என்று சொல்லி கொடுத்தார்கள

### தலைவர்கள்யார்?

நாட்டிக்கு நல்ல வழி காட்டுபவர்களே தலைவர்கள். அவர்களதுபோக்கையேபொது மக்கள் பின்பற்றுவதால் தலைவர்களது பணி எத்தகைய தூய்மையாக இருக்கவேண்டும் சொல்லளவில் மட்டுமல்லாது செயலளவிலும் அவர்கள மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். நாம்சொல்வதைச்செய்யாததாலேயே நமது சொல்லிற்கு ஆற்றலில்லை ஆனால் சேக்கிழார் திருத்தொண்டர் வரலாறுகளையும் அவர்களது ஆற்றல்களையும் எடுத்துக்காட்டுகிறார். நாயன்மார்களுடைய வாழ்வின் அன்பும் பணிவும் இருக்கிறது.

"அரசியலை மக்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும். சேக்கிழார் அரசியலில் ஈடுபட்டிருந்தவராகையால் அவருக்கு மக்கள் அறம் தெரிந்திருந்தது. அரசியலைநாம் எல்லாம்தெரிந்து வைத்திருக்கவேண்டும் அரசியலில் மாணவர்கள் ஈடுபடக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் பீ ஏ பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் 'பாலிட்டிக்ஸ்' ஒரு பாடமாக இருக்கிறது.

### மாணவரும் அரசியலும்

ஆனால் மாணவப் பிராயத்திலே அரசியலில இறங்கக்கூடாது. கல்வி கற்றபின் அரசியலில் குதிக்கலாம். கொள்கைப்பற்றுள்ளவர்கள் ஒருகணமேனும் தமது கொள்கையிலிருந்து விலகியிருப்பார்களா? உலகியலும் அரசியலும் உறுதியானதல்ல. என்றும் நிலையான பொருள் எது? இதைத்தான் உமாபதிசிவமும், சேக்கிழாரும் பாடியுள்ளார்கள்.

இந்த சேக்கிழார்விழாவின் ஆரம்பத்திலும் யானைமேல் சேக்கிழாரின் திருவுருவப் படத்தை வைத்து இளைஞர்கள் குடைபிடித்துக்கொண்டு வந்ததை நாம் கண்டோம். இது எதைக்காட்டுகிறது- நமது பாரம்பரியம் இன்றும் அற்றுப் போய்விடவில்லை என்பதையே காட்டுகின்றது.

பெரிய புராணத்தைச் சோழ மன்னனுக்குச் சொல்வதுபோல சொன்னாலும் சமுதாயத்திற்கே அவர் சொல்லுகின்றார். இருந்தாலும் சேக்கிழார் செருக்குக் கொள்ளவில்லை. உயிர்களுக்கு செருக்கு எப்பவுமே இருக்கும். ஆன்மாவிற்கு முனைப்பு இருக்கும், அதையே ஆசைமலம், அல்லது மூலமலம் என்பார்கள். ஆனால் சேக்கிழாருக்குத் தன்முனைப்பு இல்லாதபடியால் தான் அவரது பெரியபுராணம் இறைவன் பாடியதாக இருக்கிறது." (கா)

# பெற்றோர்-ஆசிரியர் சங்கம் அபிவிருத்திச் சங்கமானது ஏன்?

## கல்வி அதிகாரி விளக்குகிறார்

(யாழ்ப்பாணம்)

"பாடசாலையின் அபிவிருத்தி வேலைகள் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோருடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் மேலும் விரிவாக்கப்படவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இதுவரைகாலமும் இயங்கிவந்த பெற்றோர்- ஆசிரிய சங்கங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பின் மூலம் பாடசாலைகளுக்கண்மையிலுள்ள ஆதரவாளர்கள் நலன்விரும்பிகளின் சேவையும் பாடசாலை வளர்ச்சிக்குப் பயன்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப்பேசிய கல்வியதிகாரி திரு. சு. கி. நல்லையா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களில் மாணவர் பிரதிநிதிகளும் பங்கு பற்றக்கூடிய சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது என்றும், இதன் காரணமாக மாணவர்கள் பெரியவர்களுடன் சேர்ந்து சேவை செய்வதில் பயிற்சி பெறவும், தங்கள் குறைநிறைகளை எடுத்துக் கூறவும் வாய்ப்பு உள்ளதென்றும் தெரிவித்தார்

இக்கூட்டம் அதிபர் சங் சகோதரி அன்ரனி யோசேப் தலைமையில் நடைபெற்றது. சகோதரி அன்ரனி யோசேப் தமதுரையில் குறிப்பிட்டதாவது:

"கத்தோலிக்க திருச்சபையால் நடாத்தப்பெற்ற இக்கல்லூரி எவ்வாறு சிறப்பாய் இயங்கிவந்ததோ, அவ்வாறே அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரும் சிறப்பாக இயங்கி வருகிறது. அது மேலும் முன்னேறி வளர்வதற்குப் பெற்றோரினதும் அயலிலுள்ள நலன் விரும்பிகளினதும் ஆதரவும் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளினது ஒத்துழைப்பும் தேவை"

உயர்வகுப்புகளுக்குரிய முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பி, மாணவர் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர் தலைவர்: சகோதரி அன்ரனி யோசேப் (கல்லூரி அதிபர்), உபதலைவர்கள்: திருமதிகள் மா சவரிமுத்து, அந்தோனியா சுவாமிநாதர், செயலாளர் திரு என் கே ரகுநாதன், இணைச்செயலாளர்: செல்வி வ இமானுவல். பொருளாளர் செல்வி ரஞ்சினி சின்னத்தம்பி.

பதினேழுபேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (கா-சி)

பொன்னான வாழ்விற்கு வழிவகுக்கும் திட்டம் பற்றிய முழு விபரமும் அறிய இக் கூப்பனை எமக்கு அனுப்பவும்.

த பிறின்ஸ் கொம்பனி லிமிட்டட்

தொலைபேசி: 23861-2

பெயர்: ____

விலாசம்: ____

தொலைபேசி: ____

நிம்மதி...
மாதாமாதம்
உங்களுக்கு வருவாய்
கிடைப்பது திண்ணம்

உங்கள் வருமானத்தை சிறந்ததுகொடு உத்தரவாதத்துடன் அளிக்கும் அபூர்வ திட்டம்.

பொன்னான வாழ்விற்கு திறவுகோலான திட்டம்
உங்கள் வருங்காலத்தை ஒளிமயமானதாக்கி இருபத்தைந்து வருடங்களுக்கு மாதாமாதம் மேலதிக வருமானத்தை அளிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

எதிர்காலத்தை ஸ்திரமாக ஆரம்பிக்க ரூபா 100/- போதுமானது.

பொன்னான வாழ்விற்கு திறவுகோலான திட்டத்தில் பல தரப்பட்ட திட்டங்கள் உள்ளன.
அவற்றில் ஒன்றை நேரில் வந்து தெரிவு செய்யுங்கள்.
எதிர்காலத்தை ஸ்திரமாக்கும் உத்தரவாதமான திட்டம்.



த பிறின்ஸ் கொம்பனி லிமிட்டட்
செலிங்கோ மாளிகை,
கொழும்பு 1. தொலைபேசி: 23861-2

கிளைகள்:
101, ... வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 7680
169/2, புத்தளம் வீதி, குருநாகல் தொலைபேசி 591
... மாத்தறை தொலைபேசி 2533
60, ... வீதி, பொலன்னறுவை

# மூடப்பட்ட கிராமியவங்கிகள் மீண்டும் திறக்கப்படும்!

## கூட்டுறவாளர் மாநாட்டில் ஹேரத்

[யாழ்ப்பாணம்]

''கூட்டுறவுத்துறை தொடர்பாக இடம்பெற்ற தேவநாயகம் விசாரணையின் முதல் அறிக்கை முடித்து என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, அதனைப் படித்துவருகின்றோம், இரண்டாவது அறிக்கை கிடைக்கவில்லை. அதுவும் விரைவில் கிடைக்கும். இவற்றில் நல்லவற்றை எடுப்போம், அவற்றை வெளியிடுவோம்''

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கூட்டுறவாளர் மாநாட்டில் பேசிய உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எச் பி. ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் சங்கங்களின் சார்பில் வரவேற்புரைநிகழ்த்தினார். மாவட்ட அமைச்சர் ஜனாப் எம். மன்சூர், மற்றும் அமைச்சு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மேலும் கூறியதாவது;

''1938ம் ஆண்டு நான் முதன்முதலில் இங்கு வந்தேன். அப்போது ஆனைக்கோட்டை, சொக்குவில், பருத்தித்துறை பகுதிகளில் எனக்கு நண்பர்கள் இருந்தனர் இங்குள்ள விவசாயப் பகுதிகளை அறிவேன். கிராமியவங்கிகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். கிராமிய வங்கிகளில் உள்ளபணம் கொண்டுசெல்லப்பட்டுவிட்டது. இந்தநிலையில் அவற்றை நடத்தமுடியாமலிருக்கிறது. நாங்கள் மேலும் பல வங்கிகளை திறக்கவிருக்கிறோம். மூடப்பட்ட கிராமியவங்கிகளை படிப்படியாக திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவற்றை மூடிவிடுவது எங்கள் எண்ணமில்லை.

''மக்கள் வங்கியை விட வேறு இடங்களிலும் சங்கங்கள் கடன்பெறுகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் நன்மைக்கும் கூட்டுறவாளருக்கும் கூட்டுறவு வங்கியை திறக்க எண்ணியுள்ளேன்.

''உணவு பண்டகசாலைகள் நல்ல பயனை கொடுக்கும். இப் பண்டகசாலைகள் 4 மாதத்தில் கட்டிமுடிக்கப்பட்டன.

''கூட்டுறவு ஊழியர் சம்பளம் பற்றி ஆராய்ந்துவருகின்றோம். சங்கங்களை எப்படி நிர்வகிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து, அவை திருப்தியாக இருந்தால் பிரத்தியேகமான சம்பளத்திட்டம் உருவாக்கப்படும்.

''ஊழியர்களுக்கு 50 ரூபா அலவன்ஸ் கூட்டிக்கொடுப்பதில் எந்தவித கஷ்டமும் இருக்கமுடியாது''.

மாவட்ட அமைச்சர் ஜனாப் எம் மன்சூர் கூறியதாவது!

''இந்த நாட்டில் கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக இருந்தது. அரசு கடமையேற்று 2 ஆண்டின் பின் கூட்டுறவு இயக்கத்தை திரும்பவும் மக்களிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

யாழ் மாவட்ட சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக கடந்தகாலத்தில் கூட்டுறவு இயக்கத்தினர் முக்கிய பணியைச் செய்தனர்''.

இலங்கை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு சி. கந்தையா பேசுகையில் கூறியதாவது! இந் நாட்டின் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியின் முன்னேற்றத்திற்காக தேவநாயகம் குழு அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு அடிமட்ட நிலையிலுள்ள ஆரம்ப சங்கங்களில் இருந்து அமைக்கப்படவேண்டும்-

இங்குள்ள சங்கங்கள் கொள்வனவுக்காக கொழும்பு செல்வதால் பலவழிகளிலும் பெரும் நஷ்டம் அடைகின்றன.

கூட்டுறவுசங்க நெறியாளர் குழுவுக்கு தொழிலாளர் பிரதிநிதி உட்பட 9 பேரை நியமிக்கவேண்டும்,

மாவட்டரீதியாகவோ மாகாணரீதியாகவோ, பிரதேசரீதியாகவோ, கூட்டுறவு வங்கிகளை நிறுவவேண்டும்.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவை மாவட்ட அல்லது மாகாண அடிப்படையில் பூரண அதிகாரத்துடன் பிரித்து நிறுவவேண்டும்.

## வேலை நிறுத்தம்

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் சகலரும் நேற்றுமுன்தினம் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

இவ்வேலைநிறுத்தத்தால் 29 கிளைகளும் மூடப்பட்டுள்ளன. அரசாங்கம் தெரிவித்த 50 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டுமென்று கோரியே இவர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். ''நாங்கள் அரசுக்கு எதிரானவர்கள் அல்ல'' 'அரசு வழங்கிய 50 ரூபா சம்பள உயர்வை உடனே வழங்குக' போன்ற சுலோகங்களை தாங்கியவண்ணம் ஊழியர்கள் சங்கத்தின்முன் நின்றனர் இவர்களின் வேலைநிறுத்தத்தால் நேற்று நடைபெறவிருந்த கிளைக்குழுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் எதுவும் தாக்கல்செய்யப்படவில்லை.

பருத்தித்துறை எம் பீ திரு துரைரத்தினம், உதவி அரசாங்க அதிபர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோருக்கு இதுவிடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஊழியர்கள் தந்திகளை அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு எஸ் பீ ஹேரத்திடம் மகஜர் ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். [இ]

## தொழிற்பேட்டைக்கு அமைச்சர் விஜயம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் இயந்திர தொழிற்பேட்டைக்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் செய்த அமைச்சர் திரு. ஹேரத்தை திரு. விஸ்வலிங்கமும், மாவட்ட அமைச்சரை சங்கத்தின் உபதலைவர் திரு. எஸ் சிவசிதம்பரமும் மாலை அணிவித்து வரவேற்றனர். கொழும்பிலிருந்து அமைச்சருடன் இங்கு வந்துள்ள அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்த தொழிற்பேட்டையை பார்வையிட்டனர். சங்கத்தின் ஏனைய இயக்குநர்களும் தொழிலாளர்களும் சமூகமளித்திருந்தனர்.

மின்தறிநெசவாலை, பசைபிடும் ஆலை, சாயமிடும் நிலையம், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊழியர் இரவுவிடுதி ஆகியவற்றையும் அமைச்சர் பார்வையிட்டனர்,

## எனது அமைச்சின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசாங்க உத்தியோகத்தராக இருந்தாலும்கூட வயதில் இளையவராகக் காணப்படுகின்றார்.

''அபிவிருத்தி வேலைகளை மாவட்ட அமைச்சர் மூலம் நிறைவேற்ற அரசு வழிவகுத்துள்ளது. இதற்குச் சகல மக்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் எமது நாட்டின் தரமான துணிகளை உற்பத்தி செய்யும்வரை பாவனையாளர் நலன் கருதி அவற்றை இறக்குமதிசெய்து, அவர்கள் அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியிருக்கிறது'' என்று அமைச்சர் கூறினார்.

தலைவர் திரு.கே.சி.லோகேஸ்வரன் தமது உரையில் தெரிவித்ததாவது; ''இச்சங்கத்தை நாம் ஓர் இக்கட்டான நிலையில் பொறுப்பேற்றோம். இச்சங்கத்தில் 46 (1)ன் கீழ் விசாரணை நடைபெற்றதன் பின்னரே நாம் பொறுப்பேற்றோம். இது பற்றிய அறிக்கை கூட்டுறவு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. அவரின் ஆணையின் பிரகாரம் தற்பொழுது விசாரணை நடைபெற்று வருகிறது.

''அரசாங்கம் 10 வீதச் சம்பள உயர்வு வழங்கியபோது, கூட்டுறவுச் சங்கங்களின் முன்னோடியாக எமது சங்கமே பணியாளருக்குச் சம்பளத்தை முதலில் வழங்கியதென்பதைப் பெருமையுடன் கூறுகிறேன்.

## முக்கிய கோரிக்கை குறித்து விரைவில் நடவடிக்கை

### — கூட்டுறவு அமைச்சர்

[பண்டத்தரிப்பு]

''கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான கடன் வசதிகளை மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றன என்பதை நான் நன்கு உணருகிறேன். இலகுவாக இக்கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான வட்டியில் தமக்குத் தேவையான கடன்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மிகவிரைவில் கூட்டுறவு வங்கிகளை மீண்டும் நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது ''

இவ்வாறு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு எம். பி ஹேரத் பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வருகைதந்து பாகவை யிட்டபின்னர் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

சங்கத்தலைவரும், உதவி அரசாங்க அதிபருமான திரு மூ சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் 'உங்கள சங்கத்தின் வளர்ச்சி எமக்கும், எமது குழுவினருக்கும் பெருமகிழ்ச்சியைத் தருகிறது சங்கத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகளை ஆராய்ந்து அவற்றை நிறைவேற்றித்தர நடவடிக்கை மேற்கொள்ளுவேன். நான் நீண்டகாலம் ப. நோ. கூ. சங்கத் தலைவராகக் கடமையாற்றிய காரணத்தால் பல்வேறு பிரச்னைகளையும் நன்கு அறிந்துள்ளேன்'' என்று குறிப்பிட்டார் அமைச்சருடன் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள, யாழ். மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர், செயலாளர் திரு. யோகேந்திராதுரைசுவாமி ஆகியோரும் வந்திருந்தனர். திரு. மார்ட்டின் செல்லையா நன்றிதெரிவித்துப் பேசினார். [அ]

## வேலும்மயிலும் பதவி ஏற்றார்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு எஸ் வேலும்மயிலும் நேற்றுமுன்தினம் நண்பகல் 1-30 மணியளவில் தமது பதவியைப் பொறுப்பேற்றார்.

ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட பருத்தித்துறை நகரசபையின் தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களை நகரசபையின் செயலாளர், பிரதம லிகிதர் ஆகியோர் மாலைசூட்டி வரவேற்றனர்.

இவ்வைபவத்தில் சுயேச்சைக்குழு உறுப்பினர் இருவரும் ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. [இ]

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்

9-ம் திருவிழா

8-6-79 வெள்ளிக்கிழமை

விசேட நிகழ்ச்சி - கிளாரினட் கச்சேரி

பிரபல கிளாரினட் வித்வான்

A. K. C. நடராஜன்

தவில் வித்வான்கள்

நாச்சிமார்கோவிலடி K. கணேசபிள்ளை

இணுவில் N. R. சின்னராசா

இரவு 9 மணிக்கு கச்சேரி ஆரம்பமாகும்.

2656

## கும்பளாவளையில்நடராஜனின் கிளாரினட் கச்சேரி

[பண்டத்தரிப்பு]

பிரபல இந்திய கிளாரினட் வித்துவானும் காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்துவானுமாகிய ஏ கே சி. நடராஜனின் கிளாரினட் கச்சேரி இம்மாதம் 8ம்திகதி வெள்ளிக்கிழமை இரவு அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது, இக்கச்சேரியில் ஏ.கே.சி நடராஜனுடன் இணுவில் சின்னராசா, என்.ஆர். சின்னராசா, நாச்சிமார் கோவிலடி கே. கணேசபிள்ளை ஆகியோர் தவில் வாசிப்பார்கள். (அ)

## சர்வோதயா போட்டியிடுகிறது

[யாழ்ப்பாணம்]

வலி-கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 21ம் இலக்க ஆவரங்கால் கிளையின் கிளைக்குழுத் தேர்தலில் ஆவரங்கால் சர்வோதயா சனசமூக நிலையத்தைச்சேர்ந்த ஒன்பது பேர் போட்டியிருகின்றனர்-

மூன்று பெண்கள் உட்பட 17 பேர் போட்டியிடும் இத் தேர்தலில் சர்வோதயா சனசமூகநிலையத்தின் சார்பில் திருவாளர்கள் இ மயில்வாகனம், மு பரமசிங்காரம், வ மயிலு, மூ தங்கராசா, வ அனுபுத்திரன், சி ஸ்ரீராகவன், திருமதி மனோன்மணி, திருமதி வெ பூமணி, திருமதி க மனோன்மணி, திருமதி வெ பூமணி ஆகியோர் போட்டியிடுகின்றனர். [கு-வி]

## அணிசேரா...

[1ம்பக்கத் தொடர்ச்சி]

றது.

இன்றைய மாநாடு அரசியல் குழுவாகவும். பொருளாதாரக் குழுவாகவும் தனித்தனியாகக் கூடி நிலைமைகளை ஆராயும்.

நாளை மறுதினம் புதன் கிழமை ஆரம்பமாகும் அமைச்சர்கள் மாநாட்டை இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தன உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்துச் சிறப்புரையாற்றுவார்.

யூகோஸ்லாவிய வெளிவிவகார அமைச்சர் நன்றியுரை நிகழ்த்துவார். இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு வாஜ்பாயி நாளை இலங்கை வருகிறார். இலங்கைக் குழுவிற்கு வெளிநாட்டு விவகார அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீத் தலைமைவகிப்பார் ஏனைய முக்கிய அமைச்சர்கள் அனைவரும் நாளை மறுதினம் இங்கு வந்துசேருவாரகளென எதிர்பார்க்கப்படுகிறது [ம]

## ஐ. தே. ...!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பிரமணியமும், இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் கே. அரசரத்தினம், எஸ். துரைராஜா, கு. ஈசன் ஆகியோரும், பொருளாளராக ஆர். ரி. சுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ-அ)

## இருமாணவிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி]

வாலிபர் ஒருவரையும் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

மாதகலில்

பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த மாணவி ஒருவர் வழியில் வைத்து கார் ஒன்றில் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் மாதகலில் நடைபெற்றுள்ளது. இக் கடத்தல்சம்பவம் தொடர்பாக பிரஸ்தாப மாணவியின் தந்தை சண்டிலிப்பாய் பொலிஸ் நிலையத்தில் புகார்செய்துள்ளதை அடுத்து கடத்தப்பட்ட மாணவியை தேடிக் கண்டுபிடிக்கும் தீவிரவேட்டையில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். [அ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8943/78 The Eelanaadu P B No 49. Telegram: Eelanaadu [illegible] 489.